**செ. கு. எண்: 013** **நாள்: 24.01.2020**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை - 24.1.2020

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், ஆறுதேசம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி சுஜா என்பவரின் கணவர் திரு. ரமேஷ் என்பவர் தூத்துக்குடி-திருநெல்வேலி சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி கோமதி என்பவரின் மகன் செல்வன் டெல்லிகணேஷ் என்பவர் ஏரி நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், கண்ணமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சீனுவாசன் என்பவரின் மனைவி திருமதி முனியம்மாள் என்பவர் தீ விபத்து ஏற்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், மாரமங்கலத்துப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சக்திவேல் என்பவரின் மகன் சிறுவன் மித்ரன் என்பவர் தேள் கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், சி.என் பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பிச்சைக்காரன் என்பவரின் மகன் திரு. ராஜேந்திரன் என்பவர் கிணறு தூர் வாரும் போது விபத்து ஏற்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், ஆலூர் கிராமத்தில், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியைச் சேர்ந்த திரு. ராஜன் என்பவரின் குழந்தை மணிஷ் என்பவர் கோவில் திருவிழாவில் எதிர்பாராத விதமாக பட்டாசு வெடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், இடைக்கால் கிராமத்தைச் சேர்ந்த திருமதி மாரியம்மாள் என்பவரின் கணவர் திரு. கிருஷ்ணசாமி என்பவர் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், தேவாலா கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமுண்ணி என்பவரின் மகன் செல்வன் ராஜேஷ் என்பவர் ஆற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், பூலாம்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகேசன் என்பவரின் மகன் செல்வன் சுசிபாலன் என்பவர் இயற்கை உபாதை கழிக்க சென்ற இடத்தில், எதிர்பாராத விதமாக கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் வட்டம், நடராஜபுரத்தைச் சேர்ந்த திரு. காந்தக்குமார், செல்வன் உமா கண்ணன், திரு. இலங்கேஸ்வரன் மற்றும் திரு. மதன் ஆகிய நான்கு மீனவர்கள் பலத்த காற்றின் காரணமாக படகு கடலில் கவிழ்ந்ததில், நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், குமாரகுப்பம் கிராமத்தில் வசித்து வரும் திருமதி முத்தம்மா என்பவரின் கணவர் திரு. சுரேஷ் என்பவர் மரத்திலிருந்து தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், சேத்துமடை கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் என்பவரின் மகன் திரு. சரவணசுந்தரம் என்பவர் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

பல்வேறு விபத்துக்களில் உயிரிழந்த மேற்கண்ட 15 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட துயரச் சம்பவங்களில் **உயிரிழந்த 15 நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**